(அ) அரசுப் பணிகளுக்கான வயது வரம்புகுறித்து.

(ஆ) தீர்மானங்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 17—8—1972-ம் நாளன்று முன்னுரைக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட அரசுப் பணிகளுக்கான வயது வரம்புபற்றிய தீர்மானத்தின்மீது இப்பொழுது மேலும் விவாதம் தொடரும்.

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தினை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஏற்கெனவே நான் மொழிந்து அதன்மீது விவாதமும் நடந்திருக்கிறது.

"அரசுப் பணிகளில் அமர்த்தப்படுவதற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள வயது வரம்பை 25 என்பதிலிருந்து 30-ஆக உயர்த்த வேண்டுமென இம்மன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்தீர்மானத்தின் மீது ஏற்கெனவே திரு. க. சுப்பு, திரு. கே. எம். சுப்பிரமணியம், திரு. வா. மை. அப்துல் ஜப்பார், திருமதி டி. என். அனந்தநாயகி ஆகியவர்கள் பேசியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் ஏற்கெனவே விவாதத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதன்மீது பல கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. இதன் நோக்கம் வேலை வாய்ப்புகள் குறைவாக இருக்கும் காரணத்தினாலும், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கும் காரணத்தினாலும் வயது வரம்பு பழைய நிலையிலேயே இருந்தால் குறிப்பிட்ட நேரத்தில் வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. எனவே வயது வரம்பை அதிகப்படுத்துவதன் மூலம் இந்த வாய்ப்பினை அதிகப்படுத்தலாம் என்பது இந்தத் தீர்மானத்தின் நோக்கம் என்று கருதுகிறேன்.

ஆனால் நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் என்பதைக் குறிப்பாக படித்தவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பார்க்கும்போது, வயது வரம்பை 30-க்கு அதிகப்படுத்துவதால் இந்தப் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று கருத முடியாது. நாட்டிலே வேலை வாய்ப்பினை ஏராளமாக உருவாக்குவதன்மூலம்தான் இதற்குப் பரிகாரம் காண முடியும்.

ஆகவே, அந்த முயற்சியில் நாம் வெற்றி பெற்றால்தான் நாம் இதில் வெற்றி பெற முடியும்.

மத்திய அரசு இந்த வயது வரம்பை ஓரளவிற்கு உயர்த்தியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் நாமும் ஓரளவிற்கு உயர்த்தியிருக்கிறோம். முப்பது வயது வரையில் என்று உயர்த்தாவிட்டாலும் ஓரளவிற்கு உயர்த்தியிருக்கிறோம். ஆகவே, இது போதும் என்று நான் கருதுகிறேன். இந்தத் தீர்மானத்தின் நோக்கத்தை நாம் எதிர்க்க முனையாவிட்டாலும், அந்த நோக்கம் ஈடேறச் செய்ய உள்ள ஒரே வழி வேலை வாய்ப்பினை அதிகரிப்பது தவிர வேறு இல்லாத காரணத்தினாலும், வெறும் வயது வரம்பை மட்டும் உயர்த்துவதால் அது ஈடேறாது என்ற காரணத்தினாலும் இந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, நான் பேசும்போது வயது வரம்பை உயர்த்துவதால் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை என்று குறிப்பிட்டேன். ஆனால், ஒருவன் பள்ளி இறுதித் தேர்விலோ அல்லது கல்லூரி இறுதித் தேர்விலோ தேர்வுற்ற பிறகு வேலை தேடி எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சில் தன் பெயரைப் பதிவு செய்து கொள்ளுகிறான். ஒருவன் 1970-ல் தன் பெயரைப் பதிவு செய்து கொண்டால் அவனுக்கு 1976-ல் வேலை கிடைக்கலாம். ஆனால், இடையிலே அவனுக்கு வயது 25 ஆகிவிட்டால், பிறகு அவனுக்கு அரசாங்கத் துறையில் வேலை இல்லை, வயதாகிவிட்டது என்ற நிலை ஏற்படுகிறது. எனவே, அவன் எந்தத் தேதியில் தன் பெயரைப் பதிவு செய்துகொள்ளுகிறானோ, அந்தத் தேதியினைக் கணக்கிலெடுத்துக்கொண்டு அந்தத் தேதியில் அவன் வயது அந்த வரம்பிற்குள் இருந்தால் பின்னர் ஐந்து ஆண்டுகள் அல்லது ஆறு ஆண்டுகள் கழித்து வேலை கொடுக்கும்போது வயது வரம்பைத் தாண்டியிருந்தாலும் அவனுக்கு வேலை கொடுக்கலாம் என்ற முறையைக் கொண்டுவந்தால், வயதாகிவிட்ட காரணத்தினால், வேலை கிடைக்கவில்லை என்று அவதிப்படும் பலருக்கு உதவியாக இருக்கும். இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இது நிர்வாகத்தில் பல பிரச்சினைகளை, பல சிக்கல்களை ஏற்படுத்தும்.

1973 ஏப்ரல் 5]

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களும், அமைச்சர் அவர்களும் இந்தத் தீர்மானத்தின்மீது தங்கள் கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள்.

குறிப்பாக, வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்க வழி வகுக்கும் என்ற அடிப்படையில் இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டு இருக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கருத்தினைத் தெரிவித்தார்கள். ஏற்கெனவே இந்தத் தீர்மானத்தை முன்மொழியும்போது சொன்னேன், 'வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்கு இது உதவாது. ஆனால், வேலை யில்லாமல் வாடிக்கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் இன்னும் ஒரு ஐந்து ஆண்டுக் காலம் முயற்சித்துப் பார்க்கலாமே என்று முயற்சிப்பதற்காவது இடமளிக்கப்பட வேண்டும் என்பது தான் இதன் நோக்கம்' என்று. இதனால் அரசாங்கத்துக்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை, கஷ்டமும் இல்லை.

குறைந்த பட்சம் 'வேலை கிடைக்கவில்லையே, வயதும் 25 ஆகிவிட்டதே, இனி என்ன செய்வது' என்று விரக்தி அடையக் கூடிய தங்கள் வாழ்க்கையை வேறு திசையில் திருப்பிக்கொள்ள எண்ணுகின்ற பல ஆயிரக்கணக்கானவர்கள், இப்படித் தங்கள் வாழ்வில் வெறுப்படைந்த நிலையில் இருந்தால் அதனால் சமுதாயத்திற்கே பெருந்தீங்கு விளையும் அந்தப் போக்கை மாற்றிக்கொள்ளுவது நல்லது என்ற அடிப்படையில் வெறுப்படைந்துள்ள அவர்களுக்குச் சிறிது நம்பிக்கை ஊட்டத் தக்க விதத்தில் இதை இன்னும் ஐந்து வருஷமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

திரு. அப்துல் ஜப்பார் அவர்கள் கூறினார்கள் வயது வரம்பே கூடாது என்று. 'நாங்கள் விருப்பம் தெரிவிக்கிறோம், வேலை செய்ய, வேலை கொடுங்கள்' என்று கேட்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு வேலை இல்லை என்றால் வேலை வேண்டும் என்று விரும்பாமல் இருந்தால் பரவாயில்லை. ஆனால், வேலைக்குச் செல்லத் தயாராயிருக்கின்றார்கள். ஆனால், வேலை கொடுக்க வேண்டிய அரசாங்கம் வேலை கொடுக்கவில்லை என்று சொன்னால், அது அரசாங்கத்தின் குற்றமா அல்லது மக்களுடைய குற்றமா? மண்ணிடை ஆட்சிக் குற்றம் என்று சொல்லுகிறதைத்தவிர, வேறு ஒன்றும் சொல்ல முடியாது.

[திரு. க. சுப்பு] [1973 ஏப்ரல் 5

இருபத்தைந்து வயது அடையும் காலத்திற்குள் அவனுக்கு வேலையை அளிக்க இயலாமலிருப்பது நம் குற்றமே, ஆட்சியின் குற்றமே. இவர்கள் குற்றத்திற்காக அப்பாவி மக்கள், இளைஞர்களைத் தண்டிப்பது அவர்கள் வாழ்வில் வெறுப்பு அடைந்து அவர்களை வேறு பாதைக்கு இட்டுச் செல்லுவதை அனுமதிப்பது சரியில்லை என்றுதான் 25 வயதை 30 ஆக ஆக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அண்டையிலுள்ள பாண்டிச்சேரியில்கூட, இந்த வயது வரம்பை உயர்த்தியிருக்கின்றார்கள். அது போன்று இங்கேயும் நீட்டிக் கொடுப்பதில் என்ன கெட்டுவிடும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். முனிசிபாலிடிகளுடைய ஆயுள் காலத்தைக் கூட்டிக் கொள்ளுகின்றீர்கள். இப்படி வேலையில்லாது அவதிப்படும் இளைஞர்கள் விஷயத்தில் ஏற்கெனவே உள்ள வயது வரம்பைச் சற்றுக் கூட்டிக் கொடுத்தால் என்ன கெட்டுவிடும்?

இதைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு பாராமல், பலரும் இதை வரவேற்று இருக்கின்றார்கள், ஆளும் கட்சி உள்பட. ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள்கூட 30 வயது ஆகிவிட்டால் வேலை இல்லை என்று சொல்லுகின்றார்கள். தனியார் துறையிலுள்ள பள்ளிகளிலிருந்து அரசாங்கத் துறையிலுள்ள பள்ளிகளுக்குச் செல்ல வேண்டும் என்றால் 30 வயது ஆகிவிட்டது. எனவே, நீங்கள் வருவதற்கு இல்லை என்று சொல்லப்பட்டு விடுகிறது. பயிற்சி முடிந்ததும் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றார்கள் ஆசிரியர் வேலைக்கு. ஆனால், 30 வயது அடைந்தவுடன், சுலபமாகச் சொல்லிவிடுகின்றார்கள், 'உங்களுக்கு 30 வயது ஆகிவிட்டது, இனி அரசாங்கத்தில் உங்களுக்கு வேலையில்லை' என்று.

எனவே, இப்படி வெறுப்புற்ற இளைஞர் சமுதாயத்தினருக்குச் சிறு மன ஆறுதல் கிடைக்கத்தக்க விதத்தில் இன்னும் ஐந்து ஆண்டுக் காலம் முயற்சி செய்து பார்க்கலாம் என்ற விதத்தில் இவர்களுக்கு உள்ள இந்தத் தடையை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இது பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய ஒன்றாகும். இன்றுள்ள நிலையில், 30 இல்லை 40 வயது ஆனால்கூட இந்தப் பிரச்சினை தீரப் போவதில்லை. இருந்தாலும் 25-ஐ 30 ஆக உயர்த்துவதன்மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் சிறு வாய்ப்பினைத் தடுத்துவிட வேண்டாம். இதனால் அரசுக்கு எந்தவிதமான இழப்பும் இல்லை என்ற அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை யார் கொண்டு

1973 ஏப்ரல் 5] *[திரு. க. சுப்பு]*

வந்திருக்கின்றார்கள் என்று பாராமல் இத் தீர்மானத்தின் தன்மை என்ன என்ற அடிப்படையில் இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறி என் உரையினை முடித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் தங்கள் தீர்மானத்தை வற்புறுத்துகின்றார்களா ?

திரு. க. சுப்பு : ஆம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"அரசுப் பணிகளில் அமர்த்தப்படுவதற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள வயது வரம்பை 25 என்பதிலிருந்து 30 ஆக உயர்த்த வேண்டுமென இம்மன்றம் அரசுக்கு பரிந்துரை செய்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சிவப்பிரகாசம் அவர்கள் இருக்கையில் இல்லை. அவர் இல்லாத காரணத்தினால் அவரது தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் தம் தீர்மானத்தை இப்பொழுது முன்மொழிவார்.

(ஆ) அரசியல் அமைப்புக்கு முரணாக அமைச்சரவைக்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சியைக் கண்டித்தல்குறித்து.

THIRU M. A. LATHEEF : Sir, I move the following resolution—

"Whereas Article 164 (2) of the Constitution of India categorically declares that the Council of Ministers of a State shall be collectively responsible to the Legislative Assembly of that State, whereas irresponsible attempts are being made to bring the Council of Ministers of Tamil Nadu into disrepute by bringing in the Central Government in the form of an Enquiry Commission, this House, while condemning these unconstitutional attempts, solemnly declares that under the Constitution this House and this House alone has the duty and power to hold the Council of Ministers responsible to it, and further declares that any interference with this Constitutional power and responsibility of this